# 2 கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

**O.S.No.138/2025**

29.06.2026 வா.சா.1 திரு. சிவகுமார்

(வா.சா.1 ன் சாட்சிய வாக்குமூலம் உதவியாளரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.)

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. சிவனுகோனார் என்பவர் பெயரில் எதாவது கிரைய பத்திரம் உள்ளதா என்றால் ஒரு பத்திரம் உள்ளது. நான் வழக்கு போட்டுள்ள சொத்துகள் அந்த கிரைய பத்திரத்தில் கூறப்பட்டுள்ளது. அந்த கிரைய பத்திரத்தை நான் பார்த்துள்ளேன். நான் அந்த கிரைய பத்திரத்தைப் பற்றி என்னுடைய வழக்குரையில் கூறவில்லை என்றால் சரிதான். நாங்கள் பட்டாவை வைத்து கிரைய ஆவணம் ஏற்படுத்தியதால் சிவனுகோனார் பெயரில் உள்ள கிரைய ஆவணத்தை பற்றி கூறவில்லை. சிவனுகோனார் பெயரில் உள்ள கிரைய ஆவணத்தை தாக்கல் செய்யலாம்.

2. சிவனுகோனாருக்கு நவநீதி கிருஷ்ணன், காலங்கரையான் என்ற 2 மகன்களும், கிருஷ்ணம்மாள், ருக்குமணியம்மாள் என்ற 2 பெண் வாரிசுகளும் உண்டு என்றால் சரிதான். ருக்குமணியம்மாளுக்கு பத்மநாதன் என்ற ஒரு வாரிசு மட்டும் உள்ளது. நான் எனது கிரைய பத்திரத்தில் 2 பட்டா எண்களை கூறியுள்ளளேன் என்றால் சரிதான். பட்டா எண் 173 மற்றும் 946 ஆக கிரைய பத்திரத்தில் காட்டியுள்ளேன் என்றால் சரிதான்.

3. பட்டா எண் 173 ல் சொத்து விபரம் 615/2 சி-ல் 7 ½ ஏர்ஸ் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னுடைய பத்திரங்களில் பட்டா எண்.173 இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பட்டா எண்.173 ஆன்லைனில் எடுக்கப்பட்டதா அல்லது நேரடியாக எடுக்கப்பட்டதா என்று அடையாளம் எதுவும் இல்லை என்றால் ஆன்லைனில் தான் எடுக்கப்பட்டது.

4. பத்திரத்தில் இணைக்கப்பட்ட பட்டா அரசால் வழுங்கப்பட்ட பட்டா அல்ல என்றால் சரியல்ல. எனக்கு தாவா கிணற்றில் பிரிவின்றி 20 ல் 1 பங்கு உரிமை உள்ளது என்றால் சரிதான். மீதி 19 பங்கு யாருக்கு உரிமை பட்டது என்றால் மாங்கனி, புதியவள், கிருஷ்ணம்மாள் ஆகியோரது பெயர் மட்டுமே தெரியும். மீதி நபர்களின் பெயர் பட்டாவில் மாறாமல் உள்ளது என்பதால் எனக்கு பெயர் தெரியாது. மீதம் உள்ள 15 நபர்களின் பெயர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி மாங்கனியின் கணவர் எனக்கு நெருங்கிய உறவினர் என்றால் சரிதான்.

5. பிச்சையா பெயரில் எந்த பத்திரமும் இல்லை என்றால் சரிதான். மாங்கனியை இந்த வழக்கில் சேர்க்காமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதிக்கு எத்தனை பங்கு உரிமைப்பட்டது என்றால் பங்கு உள்ளது ஆனால் எவ்வளவு என்று எனக்கு தெரியாது. கிணற்றில் உரிமை உள்ள மற்ற எந்த ஒரு உரிமையாளர்களையும் இந்த வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்றால் மற்ற நபர்களின் சொத்துகளை எனது தாத்தா கிரையம் வாங்கியதால் அவர்களை சேர்க்கவேண்டிய அவசியல் இல்லை. ஆனால் பாட்டாவில் மற்ற நபர்களின் பெயர் மாறாமல் உள்ளது.

6. எனது தாத்தா மற்ற நபர்களிடமிருந்து கிரையம் வாங்கியது சம்பந்தமாக எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிற சொத்துகளை எனது தாத்தா வாங்கியதாக நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. தாவா கிணறு சர்வே எண்.571/4 ல் உள்ளது. அதற்கு இலவச மின்சார இணைப்பு உள்ளது சரிதான். மின் மோட்டார் உள்ளது என்றால் சரிதான். அந்த கிணற்றில் நானும் மற்ற 2 பிரதிவாதிகளும் தண்ணீர் எடுத்து விவசாயம் செய்து வருகிறார்கள். எனது பிராதில் எந்த இடத்தில் ஒவ்வொருக்கும் தண்ணீர் கொண்டு செல்வதற்கு எத்தனை நாட்கள் ஒதுக்கப்பட்டது என்று கூறவில்லை என்றால் சரிதான்.

7. தாவா கிணறு உள்ள இடம் எட்டாங்குளம் என்றால் சரிதான். அதற்கு மேற்கு பக்கம் மாங்கனி இடம் உள்ளது என்றால் சரிதான். கிழக்குப்பக்கம் எனக்குப் பாத்தியப்பட்ட இடம் உள்ளது. குறிச்சிகுளம் கிராமத்தின் எல்லை கிணற்றின் மேற்கு பக்கத்தில் இருந்து ஆரம்பிக்கிறது என்றால் சரிதான். எனக்கு குறிசசிகுளத்தில் சொத்து உள்ளது என்றால் சரிதான். அது சர்வே எண் 93/2 ஏ அதன் விஸ்தீரணம் 80 செண்ட் ஆகும். அதில் தென்னை மரம் வைத்துள்ளேன் என்றால் சரிதான். சர்வே எண் 93/2 ஏ–க்கு கிணறு இல்லை போர்வெல் உள்ளது. அந்த போர்வெல்லுக்கு இலவச மின்சார இணைப்பு இல்லை.

8. அதனால் எட்டாங்குளம் தாவா கிணறிலிருந்து தண்ணீர் எடுத்துச் செல்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு தண்ணீர் எடுத்துச் செல்வதால் பிரதிவாதிகள் காவல் நிலையத்தில் புகார் அளித்தார்கள் என்றால் தாவா கிணறிலிருந்து பிரதிவாதிகள் தண்ணீர் எடுத்து செல்வதை நான் தடுத்ததால் பிரதிவாதிகள் புகார் அளித்தார்கள். பிரதிவாதிகள் தற்போது தான் அவர்கள் இடத்தை கிரையம் வாங்கினார்கள். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு சுமார் ஒரு மாதத்திற்கு முன்பு தான் கிரையம் வாங்கினார்கள். பிரதிவாதிகள் ஒரு மாதத்திற்கு முன்பு தான் அவர்கள் சொத்தை கிரையம் வாங்கினார்கள் என்று கூறுவதும் அந்த இடத்திற்கு பிரதிவாதிகள் தண்ணீர் கொண்டு செல்ல முயற்சித்தார்கள் என்பதும் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால்

சரியல்ல. நானும் மாங்கனியும் ஒரே தேதியில் தான் சொத்தை கிரையம் வாங்கினோம் என்றால் சரிதான். தாவா கிணறு குறிப்பிட்டு இந்த நிலங்களுக்கு தான் கொண்டு செல்ல வேண்டும் என்று எந்த ஒரு ஆவணத்திலும் கூறப்படவில்லை என்றால் சரிதான்.

9. நான் டிப்ளமோ மெக்கானிக் படித்துள்ளேன். என்னுடைய பிராதில் முதல் பரிகாரமாக தபசில் 3வது அயிட்டச் சொத்திலிருந்து வாதி பாசனத்திற்காக தண்ணீர் எடுத்து அனுபவிப்பதை பிரதிவாதி இடையூறு செய்யக்கூடாது என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். அந்த பரிகாரத்தில் எந்த இடத்திற்கு தண்ணீர் கொண்டு செல்ல வேண்டும் என்று குறிப்பாக கூறவில்லை என்றால் சரிதான். பிராது 2வது பரிகாரத்தில் 3வது அயிட்டச் சொத்திலிருந்து தண்ணீர் எடுக்க சட்டப்படி உரிமை இல்லாத சொத்திற்கு பிரதிவாதி தண்ணீர் எடுக்கக் கூடாது என கோரி உள்ளேன் ஆனால் பிரதிவாதிகள் எந்த இடத்திற்கு தண்ணீர் எடுக்கக் கூடாது என்று அதில் காட்டவில்லை என்றால் சரிதான்.

10. பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையைப் படித்துப் பார்த்துள்ளேன். அதில் அவர்கள் தண்ணீர் எடுத்து எட்டாங்குளம் இடத்திற்கு போவதற்கு நான் இடையூறு செய்யக்கூடாது என்று எனக்கு எதிராக பரிகாரம் கோரியுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும். நான் இடையூறு செய்யவில்லை. நான் எட்டாங்குளம் இடத்திற்கு தண்ணீர் எடுத்து செல்வதை பிரதிவாதிகள் இடையூறு செய்யவில்லை.

11. வா.சா.ஆ.7 புகைப்படம் தாவா சொத்துக்கு சம்பந்தப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. நான் எட்டாங்குளம் கிணற்றிலிருந்து குறிச்சிகுளத்தில் எனக்கு பாத்தியப்பட்ட சர்வே எண் 93/2ஏ நிலத்திற்கு பூமியின் வழியாக பைப்களை பதித்து தண்ணீர் கொண்டு சென்று கிணற்று நீரை பயன்படுத்தி விவசாயம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் பைப் லைன் போட்டு குறிச்சிகுளத்திற்கு தண்ணீர் கொண்டு சென்றதை பிரதிவாதிகள் இடையூறு செய்ததால் நான் பொய்யான காரணங்களை கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

12. வழக்கில் கூறியுள்ள பரிகாரமும் தவறுதலாக சித்தரிக்கப்பட்டுள்ளதால் சட்டப்படி கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு எட்டாங்குளத்தில் என்னென்ன சர்வே எண்ணில் இடம் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. ஆனால் மாங்கனி இடம் 48 செண்ட் உள்ளது. 2ம் பிரதிவாதிக்கு இடம் இல்லை. 1ம் பிரதிவாதியின் பெயரில் இடம் இல்லை ஆனால் அவரது தாயார் புதியவள் பெயரில் உத்தேசமாக 1 ஏக்கர் உள்ளது. பிரதிவாதிகள் விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

13. காலங்கரையன் கோனார் எனக்கு பெயரியப்பா. கோமதி என்பவர் எனது பெரியம்மா ஆவார். அவர்கள் இருவரையும் பிச்சையா என்பவர் அவர் வீட்டில் வைத்து பராமரித்து வருகிறார் என்றால் பிச்சையாவும் அவரது 2 அக்காவும் சேர்ந்து மேற்படி ஆட்களை பராமரித்து வருகிறார்கள். வழக்கில் சரியான விபரங்கள் சொல்லாமலும், பிரச்சினைக்கு ஏற்ற பரிகாரம் கோரமலும் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

Deposition uploaded on 29.06.2026

PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL

Digitally signed by PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL
Date: 2026.06.29 19:17:25 +0530

2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.